# TNPSC GROUP II MAIN EXAM 2023
# MODEL EXAM - II
## கட்டாய தமிழ் தகுதித் தேர்வு
## பத்தாம் வகுப்புத் தரம்

| காலஅளவு மூன்று மணி நேரம்<br>*Time Allowed: Three Hours* | மொத்த மதிப்பெண்கள்: 100<br>*Maximum Marks: 100* |
|---|---|

**வினாக்களுக்கான விதிமுறைகள்**

**வினாக்களுக்கு விடை எழுதும் முன் கீழ்க்காணும் விதிமுறைகளைக் கவனமாகப் படிக்கவும்:**

- அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக.
- வினா / வினாப்பகுதிகளுக்கான மதிப்பெண்கள் அவற்றின் எதிரே தரப்பட்டுள்ளன.
- விடைகள் தமிழில் (தமிழில் எழுத்தில்) மட்டுமே வேண்டும். அல்லது வினாத்தாளில் குறிப்பிட்டபடி எழுதுதல் வேண்டும்.
- எந்தெந்த வினாக்களில் சொற்களின் எண்ணிக்கையளவு கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதன்படி விடை எழுதுதல் வேண்டும். குறிப்பிடப்பட்டிருக்கும் எண்ணிக்கையளவுக்கு மிக அதிகமாகவோ அல்லது குறைவாகவோ விடை அமைந்தால் மதிப்பெண்கள் குறைக்கப்படும். வினா-விடைக் கையேட்டில் எழுதாத பகுதி / பக்கங்கள் இருப்பின் அவற்றின் குறுக்கே கோடு இடவும்.

### QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

**Please read each of the following instructions carefully before attempting questions:**

- **All questions are to be attempted.**
- **The number of marks carried by a question / part is indicated against it.**
- **Answers must be written in TAMIL (Tamil Script) unless otherwise directed in the question.**
- **Word limit in questions, wherever specified, should be adhered to and if answered in much longer or shorter than the prescribed length, marks may be deducted.**
- **Any page or portion of the page left blank in the Question-cm-Answer Booklet must be clearly struck off.**

**கேள்வி எண் 1** **15 மதிப்பெண்கள்**

1. **பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 300 சொற்களில் கட்டுரை வரைக**

    1. மதச்சார்பற்ற தனித்தன்மையுள்ள இலக்கியம் திருக்குறள் என்பதை சான்று தந்து விளக்குக.
    2. திருக்குறளின் கருத்துகள் அன்றாட வாழ்விற்கு எவ்வாறு துணைபுரிகிறது.
    3. சமத்துவம் பற்றிய வள்ளுவர்ச் சிந்தனையை விளக்குக
    4. இன்றைய சமூக அரசியல் பொருளாதார நிகழ்விற்கு திருக்குறள் எங்ஙனம் உதவுகிறது? சான்றுடன் விளக்குக.
    5. ''திருக்குறள் ஓர் அறநூல்'' – சான்று தந்து விளக்குக.

**கேள்வி எண் 2** **10 மதிப்பெண்கள்**

2. **பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் உள்ள வினாக்களுக்கு சுருக்கமாகவும், தெளிவாகவும் சரியான விடை எழுதுக**

தமிழர்கள், தம் வாழ்க்கையை 'அகம்' எனவும் 'புறம்' எனவும் இரு கூறாகப் பிரித்தனர். இதனை, அன்பின் வழிபட்டது 'அகவாழ்வு' எனவும் வீரத்தின் வெளிப்பாடு 'புறவாழ்வு' எனவும் கூறுவர்.

**அகத்திணை விளக்கம்**

உருவத்தாலும், அகவையாலும், அறிவாலும் ஒத்த தலைவனும் தலைவியும் சேர்ந்து வாழ்வதே அகவாழ்வாகும். தலைவனும், தலைவியும் தாம் துய்த்த இன்பம் இத்தகையது எனப் பிறருக்குப் புலப்படுத்த முடியாததே அகவாழ்வாகும். இதுவே அகத்திணையாகும்.

அகத்திணை ஐந்து வகைப்படும். அவை முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப்படும். பொருந்தாக் காதலைப் பெருந்திணை எனவும், ஒருதலை காதலைக் 'கைக்கிளை' எனவும் புற ஒழுக்கத்தை ஏழு திணைகளாகவும் கூறுவர். அகத்திணை, புறத்திணை சார்ந்த செய்திகளைத் தொல்காப்பியப் பொருளதிகாரம் விரிவாக விளக்குகிறது.

உரிப்பொருளான காதலைக் கற்பனை செய்து பாடும்போது அதற்குரிய நிலம், பொழுது, பறவை, விலங்கு, பூ, மரம் முதலான கருப்பொருள்களைப் பின்னணியாக அமைத்துப் பாடும் மரபு, நெடுங்காலமாக வழக்கத்தில் உள்ளது.

**புறத்திணை விளக்கம்**

புறத்தார் யாவருக்கும் புலப்படும் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறுவது புறத்திணை எனப்படும். தொல்காப்பியம் புறத்திணைகளை ஏழு எனப்பகுக்க, புறப்பொருள் வெண்பாமாலை பன்னிரண்டாகப் பகுத்துள்ளது. தொல்காப்பியரின் பகுப்பு முறை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் ஆகும். புறப்பொருள் வெண்பாமாலையின் பகுப்புமுறை வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிறை, பெருந்திணை ஆகும். வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை ஆகிய எட்டுப் புறத்திணைகள் போருக்கான காரணங்களையும் போர் நடைபெறும் முறைகளையும் கூறுகின்றன. மன்னனின் வீரம், கொடை, புகழ் முதலானவற்றைச் சிறப்பித்துப் பாடுவது 'பாடாண்திணை' ஆகும். மேற்கண்ட ஒன்பது திணைகளில் கூறாதனவற்றைப் 'பொதுவியல் திணையில்' அடக்கிக் கூறுவர்.

**ஐந்திணைக்கான முதற்பொருளும் உரிப்பொருளும்**

| திணை | நிலம் | பொழுது | | உரிப்பொருள் |
|---|---|---|---|---|
| | | சிறுபொழுது | பெரும்பொழுது | |
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த இடமும் | யாமம் | கூதிர், முன்பனி | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| முல்லை | காடும் காடு சார்ந்த இடமும் | மாலை | கார் | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடமும் | வைகறை | கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த இடமும் | எற்பாடு | கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |
| பாலை | மணலும் மணல் சார்ந்த இடமும் | நண்பகல் | இளவேனில், முதுவேனில், பின்பனி | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |

**வினாக்கள்**

1. தமிழரின் அகவாழ்வு எத்தகையது?
2. அகத்திணை எத்தனை வகைப்படும்?

3. புறத்திணை எத்தகையது?
4. போருக்கான காரணங்களையும் போர் முறைகளையும் கூறும் புறத்திணைகள் யாவை?
5. ஐந்திணைகளுக்கான சிறுபொழுதுகள் யாவை?

**கேள்வி எண்.3** **10 மதிப்பெண்**

**3. கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்புத் தேவையில்லை**

நடுகற்கள், சிற்பக்கலையின் தோற்றுவாயாகக் கருதப்படுகின்றன. தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு முதலானவற்றில் நடுகல் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. 'நடுகல்' என்பது, போரில் வீரமரணமடைந்த அல்லது மக்களுக்காக உயிர் துறந்த வீரனின் பெயரும் பெருமையும் எழுதி நட்டுவைத்து வழிபடும் கல் ஆகும். இது 'வீரக்கல்' அல்லது 'நினைவுக்கல்' என்றும் அழைக்கப்படும். தொல்காப்பியர் காலத்தில் வழக்கில் இருந்த நடுகல் வழிபடும் முறை, பிற்காலத்தில் வீரர்களின் உருவத்தைச் செதுக்கி வழிபடும் முறையாக வளர்ந்தது. தெய்வங்களுக்குச் சுதை உருவங்கள் செய்து வழிபட்டனர். இதுவே, கல்லில் சிற்பம் செய்யும் கலையாக வளர்ச்சி பெற்றது என்று "சுதை என்பது சுண்ணாம்பை நன்கு அரைத்துக் கரும்புச்சாறு, வெல்லச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு முதலியவற்றைக் கலந்து அரைத்து வச்சிரம் போல் செய்து அதைக்கொண்டு உருவங்கள் செய்வது" என தட்சிணாமூர்த்தி குறிப்பிடுகிறார். விழாக்காலங்களில் களிமண்ணால் விலங்குகள் மற்றும் மனிதர்களின் உருவங்களைச் செய்து வைத்து வழிபடுவது கதிரை எடுப்பு, உருவாரம் எனப்படும். கல்லினால் செய்யப்படுவது கற்சிற்பங்கள் எனவும் உலோகத்தினால் செய்யப்படுவது படிம உருவங்கள் என்றும் அழைக்கப்படும்.

சங்க காலத்தில் மரச்சிற்பங்கள் அமைக்கப்பட்டதைப் பரிபாடல் மூலம் அறியலாம். கொற்கை, அரிக்கமேடு, உறையூர் போன்ற இடங்களில் நிகழ்த்தப்பட்ட அகழாய்வுகளில் அக்காலச் சுடுமண் ஓடுகளும் சிற்பங்களும் கிடைத்துள்ளன. காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த சுதைச்சிற்பங்களை இந்திர விழாவில் கூடிய மக்கள் கண்டு மகிழ்ந்தனர் என மணிமேகலை காப்பியம் எடுத்துரைக்கின்றது. சிற்பக் கலைஞர்களை 'மண்ணீட்டாளர்' என அழைக்கும் வழக்கம் இருந்ததை மணிமேகலையின் (28 : 37) மூலம் அறியலாம். கி.பி.மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி.பத்தாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் பௌத்த சமண சமயங்கள் பரவி இருந்தன. தொடக்க காலத்தில் பௌத்தர்கள் பாதபீடிக்கை, தருமச்சக்கரம் முதலியவற்றை வைத்து வணங்கினர். பின்னரே புத்தர் திரு உருவங்களை வணங்கும் முறை தோன்றியது. சமண சமயத்தில் அருகப்பெருமானின் உருவத்தையும் தீர்த்தங்கரர்களின் உருவங்களையும் வணங்கினர்.

இயற்கை உருவங்களையும் கற்பனை உருவங்களையும் வடிப்பது சிற்பக்கலை எனப்படும். கல், சுதை (சுண்ணாம்புக் காரை), மரம், மெழுகு, அரக்கு, தந்தம், உலோகம் ஆகியவற்றால் சிற்பங்கள் வடிக்கப்படுகின்றன. இவற்றைப் புடைப்புச் சிற்பங்கள், தனிச்சிற்பங்கள் என வகைப்படுத்துவர். கல், மரம், சுவர், பலகை போன்றவற்றில் புடைப்பாக உருவத்தின் முன்புறம் மட்டும் தெரியும்படி அமைக்கப்படும் சிற்பம் புடைப்புச்சிற்பம் எனப்படும். ஓர் உருவத்தின் முன்புறமும் பின்புறமும் முழவடிவமாக வடித்தல் தனிச்சிற்பம் எனப்படும். ஓர் உருவத்தின் முன்புறமும் பின்புறமும் முழுவடிவமாக வடித்தல் தனிச்சிற்பம் எனப்படும். தமிழ்நாட்டுச் சிற்பக்கலை, கோயில்களை அடிப்படையாகக்கொண்டு வளர்த்தெடுக்கப்பட்டது. தொடக்ககாலச் சிற்பங்கள் மரத்தினாலும் சுதையினாலும் செய்யப்பட்டவை. இப்பொழுதும் அத்தகைய சிற்பங்களைக் காணலாம். எடுத்துக்காட்டாக சுந்தர வரதராஜப்பெருமாள் கோயிலில் உள்ள கடவுள் உருவங்கள் மரத்தால் செய்யப்பட்டவையாக உள்ளன. திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள், காஞ்சி பாண்டவதூதப் பெருமாள் முதலிய உருவங்கள் சுதையினால் செய்யப்பட்டவை. கல்லினால் சிற்பம் அமைக்கும் முறை பல்லவர் காலத்திலும், உலோகத்தினால் சிற்பம் அமைக்கும் முறை பிற்காலச் சோழர் காலத்திலும் பின்பற்றப்பட்டன.

**கேள்வி எண் 4:** **10 மதிப்பெண்கள்**

**4. பின்வரும் சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல் (300 வார்த்தைகளுக்கு மிகாமல்)**

உண்மை – அகிம்சை – சத்தியாகிரகம் - சர்வோதயம் - சமூகத்தொண்டு – சமய நல்லிணக்கம் - அகிம்சை கோழைகளின் ஆயுதமன்று – ஒழுக்கத்தைத் தருவதே சமயம் - துடுப்பில்லாத படகு - இயற்கை – எளிய வாழ்வு – தாய்மொழியில் கல்வி – தொழிற்கல்வி – எண்ணம் - சொல் - செயல் - நேர்மை

**கேள்வி எண் 5:** **10 மதிப்பெண்கள்**

**5. பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக**

இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறை திருப்புவனம் தாலுகாவிலுள்ள கீழடி கிராமத்தில் சங்க காலத்தைச் சேர்ந்த பழமையான நகரத்தை அகழ்ந்து ஆய்வு செய்துள்ளது. செங்கற்களால் கட்டப்பட்ட கட்டடங்கள் நன்கு அமைக்கப்பட்ட வடிகால் அமைப்பு போன்ற சான்றுகள் இந்த ஆய்வில் கிடைத்துள்ளன. மேலும் தமிழ்-பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ள மண்பாண்டங்கள், கண்ணாடியிலான மணிகள் செம்மணிகள், வெண்கல படிகம், முத்துக்கள், தங்க ஆபரணங்கள், இரும்புப் பொருட்கள், சங்கு வளையல்கள், தந்தத்தால் செய்யப்பட்ட பகடை போன்றவையும் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன.

2017ஆம் ஆண்டில் இந்திய தொல்லியல் துறை இரு மாதிரிகளை கதிரியக்க கார்பன் வயதக்கணிப்பு முறையில் கணிக்க அமெரிக்காவில் புளோரிடா என்னும் இடத்தில் உள்ள மீட்டா அனாலடிக் என்ற நிறுவனத்திற்கு அனுப்பியது. அச்சோதனையில் இப்பொருள்கள் கி.மு. (பொ.ஆ.மு) 200-ஐச் சார்ந்தது என்பது தெரியவந்துள்ளது. இங்கு ரோம் நாட்டைச் சேர்ந்த பழங்கால தொல் பொருட்கள் கிடைத்துள்ளன. இவை இந்தியாவிற்கும் ரோம் நாட்டிற்கும் இடையே நிலவிய வணிகத் தொடர்பிற்கு மேலும் சில சான்றுகளாகும். தீபகற்ப இந்தியாவிலிருந்து எஃகு ரோம் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது குறித்தும் அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் இவற்றின் மீது வரி விதிக்கப்பட்டுள்ளது என்பன குறித்தும் பெரிப்பிளஸில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கேள்வி எண் 6:** **10 மதிப்பெண்கள்**

**6. பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்கவும்**

Periyar understood the relevance of mass communication in spreading rationalist thought. He started a number of newspapers and journals such as Kudi Arasu (Democracy) (1925), Revolt (1928), Puratchi (Revolution) (1933), Paguththarivu (Rationalism) (1934), and Viduthalai (Liberation) (1935). Kudi Arasu was the official newspaper of the Self-Respect Movement. It brought out te multiple voices and ideas of Non-Brahmins, women and religious minorites. Usually Periyar wrote a column and expressed his opinion on social issues in each of its issues. He frequently wrote columns under the pseudonym of Chitraputtiran.

**கேள்வி எண் 7:** **15 மதிப்பெண்கள்**

**அலுவலகக் கடிதம்**

அரசுப் பணியாளர் சங்கங்கள் தமிழக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ஒருநாள் ஊதியத்தை வழங்குதல் தொடர்பாக அரசுச் தலைமைச் செயலருக்கு அனுமதி வேண்டி ஒரு கடிதம் வரைக.

**கேள்வி எண் 8:** **20 மதிப்பெண்கள்**

**a. கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக**

1. ஏற்றுமதி
2. முத்தமிழ்
3. நீதி
4. சொல்வளம்

**b. பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க**

1. கோளம் - கோலம்
2. அழகு – அலகு
3. விளக்கு – விலக்கு
4. கரை – கறை

**c. பிரித்து எழுதுக**

1. சிறிதளவு
2. நிலவொளி
3. பசியறியாமல்
4. தேர்ந்தெடுத்து

**d. எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக**

1. நான் ஓவியத்தைக் கண்டேன்
2. நேரத்தை சரியாகக் கடைப்பிடிப்பேன்
3. இன்று பேருந்து வரும்
4. கனிமொழி நன்கு பேசுவாள்

**e. பிழை நீக்கி எழுதுக**

1. நரி கத்த, ஆந்தை கூவியது
2. அவரக்காய் கூட்டம் கூட்டமாய்க் காய்க்கும்
3. எரும்பு ஊறக் கல்லும் தேயும்
4. வருமை நீக்கி வழமை காப்பதே அரசணின் பனியாகும்

APOLLO STUDY CENTRE